Registered [illegible] மக்கங்கள் 04 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 06 ( 19 - 05 - 1992 ) செவ்வாய்க்கிழமை ஓசை: 91

1990 க.பொ.த. (சா. த) பரீட்சை

## இம்மாதம் 30ஆம் திகதி செய்முறைப் பரீட்சை

1990 ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர [சாதாரணதர] செய்முறைப் பரீட்சை இம்மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற உள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன. பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை அப் பாடசாலை அதிபர்களோ ஆசிரியர்களோ யாழ். கல்வித் திணைக்களத்தில் எதிர் வரும் 25 ஆம் திகதிக்குப் பின்னர் பெற்று மாணவர்களுக்கு வழங்கும்படி யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

வற்றாப்பளையில் கோரச் சம்பவம்

# ஆலயத்தின் மீது எறிகணை வீச்சு; 15 பக்தர்கள் உடல் சிதறிப் பலி;

## 25க்கு மேற்பட்டோர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை அம்மன்கோவில் பொங்கலில் கூடி நின்ற பக்தர்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலினால் பதினைந்து பேர் கோரப்பலியானதுடன் இருபத்தைந்திற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். நேற்று நண்பகல் ஒரு மணி அளவில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வற்றாப்பளை அம்மன் கோயிலை நோக்கி இராணுவத்தினர் அடுத்தடுத்து நான்கு எறிகணைகளை ஏவினர் இவற்றில் மூன்று எறிகணைகள் கோயிலை அண்டிய கடற்கரையோரமாக வீழ்ந்து வெடித்தன.

இந்த எறிகணைத் தாக்குதல் ஆரம்பமானதும் கோயிலில் வழிபட்டுக் கொண்டிருந்த பக்தர்கள் சிதறிஓடினர்.

இறுதியாக ஏவப்பட்ட எறிகணை ஒன்று வசக்கிப் பாதுகாப்பு நிலையப் பகுதியில் வீழ்ந்து வெடித்தது.

இதன்போது அப்பகுதியில் நின்ற பக்தர்களில் பத்துப்பேர் ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியாகினர். ஐவர் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும் பலியாகினர். இருபத்தைந்துக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்து சுருண்டு வீழ்ந்தனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வேவுவிமானம் நோட்டம்

(யாழ்ப்பாணம்)

மாதகல், பண்டத்தரிப்புப் பகுதிகளை மையமாகக் கொண்டு நேற்று சிறிலங்காவின் வேவு விமானம் ஒன்று பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது.

நேற்றுக்காலை 10 மணியளவில் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து புறப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வாகரைராணுவநடவடிக்கை மக்கள் இடம் பெயர்வு

(மட்டக்களப்பு)

வாகரைப் பகுதியை மையமாக கொண்டு மட்டக்களப்பின் வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

அங்கு ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், கவசவாகனங்களும் குவிக்கப்பட்டுள்ளன. குண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்திகளும் காடுகள் மீது குண்டு வீசி அவற்றை அழித்து வருகின்றன.

இக்குண்டு வீச்சுகளினாலும் தொடர் இராணுவ நடவடிக்கையாலும் பெருமளவு மக்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்து வருகின்றனர்.

வாகரை, கதிரவெளி பகுதியில் முன்னர் பாரிய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. அம் முகாம்களுக்கும் மட்டக்களப்பிலுள்ள முகாம்களுக்கும் இடையில் தொடர்புகள் குறைவாக இருந்தமையாலும், விடுதலைப் புலிகள் பல தடவை மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்களினாலும் அங்கிருந்த இராணுவ முகாம்கள் வாழைச்சேனைப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டன.

இதனையடுத்து அப்பகுதியில் தமிழ் மக்கள் மீளக் குடியமர்ந்தனர் இராணுவ கெடுபிடிகள் இருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வீரச்சாவு

## மேஜர் குலதீபன் வீரவேங்கை தயாநிதி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு குடாவெட்டை என்னும் இடத்திற்கு இயக்க வேலை தொடர்பாக சென்று திரும்பிக்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் லாவணை என்னுமிடத்தில் பதுங்கியிருந்து தாக்கினர்.

இச் சம்பவம் கடந்த பதினைந்தாம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் இடம் பெற்றது.

இத் தாக்குதலின் போது இரண்டு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர். மேஜர் குலதீபன் (நாகலிங்கம் சச்சிதானந்தம் - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு) வீரவேங்கை தயாநிதி (சின்னத்தம்பி கலாநிதி - அம்பிலாந்துறை, மட்டக்களப்பு) ஆகியோரே இச்சம்பவத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்களாவர்

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இந்த இரு வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## தமிழர்களின் வீடுகளில் முஸ்லிம்கள் குடியேற்றம்

(மன்னார்)

மன்னார் தீவுப்பகுதியில் பெருமளவு முஸ்லிம்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். தீவிலிருக்கும் முஸ்லிம்கிராமங்களில் மட்டுமன்றி தமிழர் தேசங்களில் முஸ்லிம்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை மன்னார் தீவில் இராணுவத்தினர் வெளியேறிய வீடுகளில் தமிழர்கள் குடியமர அனுமதிக்கப்படுவ

புலிகள் மீதான தடை

## இனப்பிரச்சினையில் மேலும் சிக்கல் அரச வட்டாரங்களில் குழப்ப நிலை

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடை காரணமாக தமிழரின் தேசிய இனப்பிரச்சினை மேலும் சிக்கலடைந்துள்ளது விடுதலைப் புலிகளை அந்நியமாக்கிவிட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பது இயலாத காரியமென்றும், இந்தி

கொள்வது என்பது புரியாது கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் குழப்ப நிலை நிலவுகிறது. அவசரப்பட்டு இந்தியா மேற்கொண்ட இந்

முடியாது திணறிக் கொண்டிருந்த சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த

தீவிலிருக்கும் முஸ்லிம்கிராமங்களில் மட்டுமன்றி தமிழர் வீடுகளிலும் முஸ்லிம்கள் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இதுவரை 500க்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

மன்னார் பெரு நிலப்பரப்பில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நானாட்டான், வங்காலை ஆகியன உட்பட தமிழரின் பல பாரம்பரிய பிர

றிய வீடுகளில் தமிழர்கள் குடியமர அனுமதிக்கப்படுவதில்லை. முஸ்லிம்கள் அவ்வீடுகளில் குடியமர்த்தப்படுகின்றனர்.

இந்தியாவில் இருந்து திரும்பிய அகதிகளும், மன்னார் தமிழ் மக்களும் எதுவித வசதியும் அற்ற கட்டடங்களிலும், கூடாரங்களிலும் வாழ்ந்துவருகின்றனர்.

## இராணுவ அதிகாரிகள் குழு சீனாவிற்கு விஜயம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ கவச வாகனப் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு ஒன்று சீனா சென்றுள்ளது. இராணுவம் சீனாவிடமிருந்து கொள்வனவு செய்த யுத்த வாகனங்களில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறைத் தொடர்ந்து உதிரிப் பாகங்கள் பெறுவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவே அவர்கள் சீனா சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவிடமிருந்து சிறிலங்கா அரசினால்கொள்வனவுசெய்யப்பட்டவிசைப்படகுகள், டாங்கிகள் பல பழுதடைந்ததுள்ளதுடன் அவை உதிரிப்பாகங்கள் இல்லாமையால் தேடுவாரற்று கிடப்பதும் தெரிந்ததே.

சீனாவிடம் வாங்கிய மூன்று விசைப்படகுகளை திருத்த மூன்றுசீனநிபுணர்கள் முயற்சி செய்தும் பலனளிக்காதது குறிப்பிடத்தக்கது.

ஸ்தலத்திலேயே துடிதுடித்துப் பலியாகினர். ஐவர் வைத்திய

காரணமாக தமிழரின் தேசிய இனப்பிரச்சினை மேலும்

## பலியானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வற்றாப்பளை அம்மன் ஆலய பக்தர்கள் மீது இராணுவத்தினர் மேற் கொண்ட ஏறிகணைத் தாக்குதலின் போது தந்தை, மகள் உட்பட பதினைந்து பேர் பலியாகினர் இதில் பத்துப் பேர் ஸ்தலத்திலும் ஐவர் மருத்துவ மனைகளுக்கு எடுத்துவரப்படும் போது வழியிலும் பலியாகினர்.

மேற்படி சம்பவத்தின் போது பலியானோர் சிலரின் பெயர் விபரங்கள் வருமாறு:

ச. நவரட்ணம் (வயது 38 செம்மலை), இவரது மகள் நயுவராஜினி (வயது 2), செஞ்சிலுவைச்சங்க தொண்டர் சண்முகலிங்கம் (வயது 42 புதுக்குடியிருப்பு) ஏனையோரது சடலங்கள் முள்ளியவளை வைத்தியசாலையில் அடையாளங் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. (ச)

## காயமடைந்தோா விபரம்

வற்றாப்பளை அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் விழாவின் இறுதி நாளான நேற்று ஆலயம் நோக்கி இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலின்போது முதியவர்கள், சிறுவர்கள், பெண்கள் உட்பட 25பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தோரில் பெரும்பாலானோர் உடனடிப் போக்குவரத்து வசதி இன்மையால் முள்ளியவளை, புதுக்குடியிருப்பு வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தின்போது காயமடைந்தவர்களில் ந.சிவ

[4 ஆம் பக்கம் பார்க்க]

தாவு காண்பதென்பது இய லாத காரியமென்றும், இந்தியாவின் தடை தமிழரின் பிரச்சினையில் புதிய நெருக்கடியை தோற்றுவித்துள்ளதென்றும் கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் கருத்து தெரிவித்துள்ளன. இந்தியாவின் இந்த நடவடிக்கையால் இனப்பிரச்சினை தொடர்பாக அடுத்து என்ன நடவடிக்கையை, மேற்

நிலவுகிறது. அவசரப்பட்டு இந்தியா மேற்கொண்ட இந் நடவடிக்கை தமிழர் பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள மேற்குலக நாடுகள் மத்தியிலும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும்தோற்றுவித்துள்ளது

இதுவரை காலமும் இராணுவ நடவடிக்கை மூலம்குறிப்பிடத்தக்க வெற்றியைக்காண

என்ற நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில் இந்தியா புலிகள் மீது தடை விதித்துள்ளதால், சிறிலங்காவின் அணுகு முறையில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளை அந்நியமாக்கி விட்டு பாராளுமன்றத் தெரிவுக்குழு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் விமானப்படை தாக்குதல் நடவடிக்கை தீவிரம்

[வவுனியா]

வவுனியாமாவட்டத்தில்சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்குவானூர்திகளும் பாரிய தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

நேற்று முன்தினம் நொச்சிமோட்டையை அண்டிய கிராமங்களில் சிறிலங்கா குண்டு வீச்சுவிமானங்கள் நான்குமணி நேரம் இடைவிடாத தாக்குதல்களை நடாத்தியுள்ளன.

வவுனியா விமானத் தளத்திலிருந்துசெயற்பட்ட இவ் விமானங்கள் மாறி மாறி வந்து தாக்குதல்களை மேற்கொண்டன. இடையிடையே சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான உலங்கு வானூர்திகளும் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் றொக்கற் தாக்குதலில் ஈடுபட்டன.

நேற்று முன் தினம் கட்டையர் குளப்பகுதியிலும் குண்டு வீச்சுவிமானங்கள்தாக்குதலை மேற்கொண்டமை தெரிந்ததே.

## மருதங்கேணியில் குண்டு வீச்சு ஆஸ்பத்திரி, வீடுகள் சேதம்

மருதங்கேணியில் மீண்டும் நேற்று முன்தினம் காலை பொம்மர் குண்டுவீச்சு விமானங்கள் வைத்தியசாலை அமைந்துள்ள பகுதியை நோக்கி குண்டுகளை வீசின

இக்குண்டு வீச்சினால் அப்பகுதியைச் சேர்ந்த சுமார் ஐந்து வீடுகள் வரை சேதமடைந்ததுடன் வைத்தியசாலைக் கட்டடத்திற்கும் சேத மேற்பட்டுள்ளது

கடந்த வியாழக் கிழமை அப்பகுதியில் ஏற்பட்ட குண்டு வீச்சை அடுத்து பொதுமக்களும் வைத்தியசாலை ஊழியர்களும் நோயாளர்கள் தற்காப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதினால் உயிர் ஆபத்துக்கள் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

பொம்மர் விமானங்கள் குண்டுகளை வீசிவிட்டுச் சென்ற பின்னர் வை - 12 ரக குண்டு வீச்சு விமானமொன்றும் அப்பகுதிக்கு மேலால் பல தடவை பறந்து வட்டமிட்டுச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது. [36]

## மீன்பிடித் தடையால் 10,000 குடும்பங்கள் பாதிப்பு

யாழ். குடாக்கடலில் மீன் பிடிக்க பாதுகாப்பு படையினர் விதித்த தடையினால் 10.000 மீனவக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இதுவரை காலமும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவந்த மீனவக் குடும்பங்களில் பெரும்பாலானவர்கள் தமது இருப்பிடங்களைவிட்டு இராணுவ நடவடிக்கையினால். வெளியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சட்டத்தினால் மீன்பிடித் தொழிலின் பங்கு யாழ். மாவட்டத்தில் குறைவடைந்துள்ளதுடன் சந்தை விலையும் கூடுதலாகவுள்ளது.

# இராணுவ முன்னணி பாதுகாப்பு நிலைகளில் அமைப்பு மாற்றம்

### -புலிகளின் அதிரடித் தாக்குதலின் எதிரொலி

(கொழும்பு)

இராணுவத்தின் 'பலவீனமான இடங்கள்' என்றழைக்கப்படும் பகுதிகளில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் இராணுவத்தின் முன்னணிப் பாதுகாப்பு நிலை அமைப்புகளில் மாற்றம் செய்ய விருப்பதாக உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவ முன்னணிப் படை அணியில் கட்டுப்பாடின்மை, அலட்சியம் ஆகியன நிலவுவதால் தீவிரவாதிகள் இலகுவாகத் தாக்குதலை நடத்த முடிகிறதென்றும், இந்த முன்னணிப் பாதுகாப்பு அமைப்பைப் பலப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் வடக்கு-கிழக்கு காடுகளில் இராணுவம்நடந்து ரோந்து செய்தது. ஆனால் பாரிய நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. மக்கள் பலவேகய முறை இராணுவ நடவடிக்கைகள் பற்றித்தான் அறிந்திருக்கிறார்கள். ஆனால் தினமும் சிறியளவிலான இராணுவ நடவடிக்கைகளைச் செய்து வருகிறோம். ஆனால் பாதுகாப்புக்காரணங்களுக்காக நாம் அதுபற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை என்றார் அந்த அதிகாரி.

இதே வேளை, இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க வியாழனன்று வாராந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில், வவுனியாப் பகுதிகளில் தமது முன்னணிப் பாதுகாப்பு அமைப்புகள் மீது தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாகத் தெரிவித்தார். இராணுவத்தில் மந்த நிலை ஒன்றும் இல்லையென்றும், சிறியளவிலான நடவடிக்கைகளை இராணுவம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

ந.ராஜேஸ்வரியாகியஎனது இரண்டு அடையாள அட்டையும்மணிப்பேசும்கல்வியங்காட்டுச் சந்தையுள் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் 10/2 மூர்த்த விநாயகர் வீதி, நல்லூரில் ஒப்படைக்கும்படிகேட்டுக்கொள்கிறேன். [2581)


## அதிரடிப் படையினரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வீரமுனை கண்ணகையம்மன் ஆலய தர்மகர்த்தா சபை உறுப்பினர் ஒருவர் கடந்த வாரம் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புலிகளுக்கு நிதியுதவி செய்தார் என்ற குற்றம் சாட்டப்பட்டே இவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## உணவு முத்திரை

(குருநகர்)

வறிய குடும்பங்களுக்கான ஏழாவது தொடர் உணவு முத்திரைகள் குருநகர் மேற்குகிராமசேவையாளர் பிரிவில் வழங்கப்பட்டு வருகின்றன.

முத்திரைகளைப் பெற்றுக்கொள்வதில்பொதுமக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் இல்லை என்றும் குருநகர்மேற்குகிராமசேவையாளர் திரு.எ. அலெக்ஸிஸ் தெரிவித்தார். (21)

## 31 தொழுநோயாளர்

[மானிப்பாய்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக முப்பத்தொரு பேர் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருப்பதாகச் சுகாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நோயாளர்களில் பதினொருபேர் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் நிர்வாக எல்லைக்குள் இருக்கிறார்கள்.

## மைசூர் பருப்பு இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

மைசூர்பருப்பு இறக்குமதியை தாராள மயப்படுத்தி தனியார் துறையினரும் அதனை இறக்குமதி செய்வ

## மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி விரைவில் பதவிவிலகுகிறார்

(கொழும்பு)

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரெட்ணாவுக்கு அடுத்த நிலையில் உள்ள இராணுவத் தலைமையதிகாரி மேஜர் ஜெனரல் ஸ்ரான்லி டி. சில்வா இவ்வருடம் ஜூன் மாதத்தில் பதவியிலிருந்து விலகவுள்ளார் என நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

77,000 பேரைக்கொண்ட சிறிலங்கா இராணுவ உயர் மட்டத்தில் செய்யப்பட்ட பதவி உயர்வுகளையும் மாற்றங்களையும் தொடர்ந்து பதவியிலிருந்து விலகவிருக்கும் முதல் இராணுவ அதிகாரி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுக்கூட்டம்

(புங்குடுதீவு)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 22.05.92 வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள கூட்டுறவுக் கல்லூரியில் இயங்கும் மேற்படி சபை மண்டபத்தில் நடைபெறும்.

## அரசியல்வாதியால் நிருபர் தாக்கப்பட்டார்

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் பத்திரிகை நிருபர் ஒருவரை உள்ளூர் அரசியல்வாதி தாக்கியுள்ளார். இது தொடர்பான விசாரணையை அநுராதபுரப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தாக்குதலுக்குள்ளானவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றின் செய்தியாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது

## நாட்டுக்கூத்து, அம்மானை எமது பாரம்பரிய கலைகள் - வண. பிதா ஜெபநேசன்

(குருநகர்)

''கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக எமது கலைப்பாரம்பரியத்தில் நாட்டுக் கூத்து, அம்மானை,பாசாப்பு போன்ற கலை வடிவங்கள் இணைந்து வந்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.''

கடந்த (16-5-92) சனிக்கிழமை மாலை யாழ் பேராலய வளவில் நடைபெற்ற நாட்டுக்கூத்து கலாநிதி பூந்தான் யோசேப்புவின் பத்தாவதாண்டு நினைவு வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசிய பேராலய பங்குத் தந்தை வண-எஸ்.எச். ஜெபநேசன் அடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்-நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம் வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தது.

தொடர்ந்து பேசிய வண-ஜெபநேசன் அடிகள் ''பசி, பட்டினி நாட்டில் ஏற்படும் காலங்களில் பாசாப்பு ஒன்றைப் படித்தால் நீங்கிவிடும் என்ற ஐதிகம் இருந்து வந்தது

பாசாப்பு,அம்மானை. நாட்டுக் கூத்துகளைப் பாடியவர்கள் புலவர்கள் படிக்காத பாமரர்களாக இருந்தனர். அவர்களுடைய இயற்கையான ஆற்றலை மெச்சி மக்கள் பணமுடிப்பு வழங்கி பட்டங்கள் சூட்டிக் கௌரவித்தனர் இவ்

கள் அதனில் ஈடுபட்டு அதற்கு ஒரு அந்தஸ்தை சமூகத்தில் பெற்றுக் கொடுத்தார்'' என்றார்.

யாழ் - ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசியுரை வழங்கினார்.

'குருசரணம்' நினைவுமலரை வெளியிட்டு வைத்து உரையாற்றிய திருமறைக் கலாமன்ற இயக்குனர் புலவர் நீ. மரியசேவியர் அடிகள் ''கலைஞன் எவனும் இறப்பதில்லை. அவனது படைப்புகள் மூலம் அவன் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பான். அத்தகைய ஒரு கலைஞர்தான் நாட்டுக்கூத்துக் கலாநிதி ''பூந்தான் ம யோசேப் அவர்களும்'' என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி பேருரையில்: ''கத்தோலிக்க பாரம்பரிய நாட்டுக்கூத்து வரலாற்றில் பூந்தான் யோசேப்புவின் பெயரை விலக்கி விட முடியாதளவுக்கு முத்திரையிடப்பட்டிருக்கிறது'' என்றார்.

வரவேற்புரையை திரு. அ. பிரான்சிஸ் ஜெனமும், நன்றியுரையை திரு. அன்டர்சனும் நிகழ்த்தினர். இறுதியாக ''எஸ்தாக்கியார்'' நாட்டுக்கூத்து நடிக்கப்பட்டது. (21)

# புலிகளின் தலைவர் 'இல்லாத நிலையில்' விசாரணை செய்ய முடியுமா?

## இந்திய சட்டவல்லுனர் விளக்கம்

(சென்னை)

தலைவர் வே.பிரபாகரனும் அவ் இயக்க பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானும் ''இல்லாத நிலையில்'' விசாரணை செய்யப்பட முடியுமா என்று இந்தியாவில் கேள்வி எழும்பியுள்ளது.

இந்தியாவில் எந்த ஒரு குற்றம் சாட்டப்பட்ட நபரும் ''இல்லாத நிலையில்'' விசாரணை செய்யமுடியாதென சட்டவல்லுனர் ஒருவர் கூறுகின்றார்.

''எந்த ஒருவகையான விசாரணையிலும் குற்றம்சாட்டப்பட்டவர் நீதி மன்றத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும் குற்றப்பத்திரிகை அவரின் பெயரைக் குறிப்பிடவேண்டும் ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் பலர் இருந்து அவர்களில் சிலர் தலைமறைவாக இருப்பார்களேயானால் கைது செய்யப்பட்டவர்களின் வழக்குத் தனியாகக் கையாளப்படவேண்டும். ஏனைய குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்யமுடியவில்லை என்றால்அவ்வாறான நபர்கள் காலவரையறையின்றி காவலில் வைத்திருக்க முடியாது எனவும் அந்த நிபுணர் கூறினார்.

ஆனால், திரு பிரபாகரனும், பொட்டு அம்மானும் இல்லாத நிலையில் விசாரணை செய்யப்படுவார்களா? என்பதைக் கூட விசேட புலனாய்வு அதிகாரிகள் மறுத்து விட்டார்கள்.

## புலிகளுடன் பேச்சுவார்த்தை என்று பகற் கனவு காண்பதை தொண்டா கைவிடவேண்டும்

### ஹெல உறுமய அறிவிப்பு

[கொழும்பு]

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணும் 'பகற்கனவை'க் கைவிட்டு சிறிலங்காவிலிருந்து புலிகளை அகற்றுவதற்கு உதவுமாறு ஹெல உறுமய முஅமைச்சர் எஸ். தொண்டமானைக் கேட்டுள்ளது.

ஹெல உறுமய கொழும்பில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், தொண்டமான் யாழ்ப்பாணத்துக்குப் போய் புலிகளுடன் பேசிச் சமாதானத் தீர்வொன்றைக் காணப் போவதாகத் தெரிவித்துள்ளார். தொண்டமான் யாழ்ப்பாணம் போகவேண்டிய அவசியமில்லை. பௌத்த பிக்குகள் முன்வைத்த 13 அம்சங்கள் கொண்ட தீர்வுத் திட்டத்தைப் புலிகள் ஏற்கவில்லை என்றும்,

பௌத்த பிக்குகளின் தீர்வுத் திட்டம் புலிகளுக்குச் சாதகமானது. அதை ஏற்காத புலிகளுடன் தொண்டமான் எப்படிச் சமாதானம் செய்து கொள்ளப் போகிறார்? என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். பாடசாலைகள் மெய்வல்லுனர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களம் நடாத்தும் வருடாந்த யாழ் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டி ஜூன் மாதம் 8ஆம்,9 ஆம் திகதிகளில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் கலந்து கொள்ளவுள்ளார்.

இடபோட்டியில் கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களையும் பெற்ற 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண், பெண் போட்டியாளர்கள் கலந்து கொள்வார்கள்.

## சுவிஸ் பிரஜை குறித்து இன்ரபோல் அறிவிப்பு

ஜா. எல பகுதியில் பெருமளவு ஆயுதம் வெடிமருந்துகளுடன் சிக்கிய சுவிஸ் பிரஜை பற்றிய விரிவான அறிக்கையை இன்ரபோலின் கிளை இங்கு அனுப்பி உள்ளது தற்போது இந்த அறிக்கை விசேட நடவடிக்கைக் குழுவிடம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஏயர் லங்கா ஊழியர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

ஏயர் லங்கா ஊழியர் ஒருவர் சாதாரண உடையில் இருந்த பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

பத்து லட்சம் ரூபா பெறுமதியான 13 தங்கக் கட்டிகள் கடத்தலுக்கும் இவருக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது கடந்த வெள்ளியன்று சிங்கப்பூரிலிருந்து விமானத்தில் தங்கக் கட்டிகள் கொண்டு வரப்பட்டன என்றும் அதைக் கடத்துவதற்கு இந்த ஊழியர் உதவியதாகவும் விசேட நடவடிக்கைப் பிரிவுப் பொலிசார் தெரிவித்தனர் விசாரணை தொடர்கிறது.

## பலமொழிகளில் தேர்ச்சிக்கு விசேட ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் புலமையுள்ள அதிகாரிகள், ஆசிரியர்களுக்கு படி உயர்வு, ஊக்குவிப்புப் பணம் ஆகியன வழங்கப்படவுள்ளன. அனுமதியுமின்றிச் சில அதிகாரிகள் மேற்படி நன்மைகளைப் பெற்றிருப்பதும் மாகாண அமைச்சின் சுற்றுநிருபத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## கருத்தரங்கு

மலச்சிக்கல், மூலவியாதி நோய்களைப் பற்றிய கருத்தரங்கும், அந்நோய்களைக் குணப்படுத்தும் யோகசிகிச்சை முறைகளும், அந்நோய்களைக் குணப்படுத்தும் யோகாசன செய்முறைப் பயிற்சியும் எதிர்வரும் 24-05-92 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெற உள்ளது.

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினரால் இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபத்தில் நடைபெறும்.


## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் கிராமிய வங்கி சேமிப்பு கணக்கு மீளாய்வு செய்தல்

ஊர்காவற்றுறை பல. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்குகளை மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பித்தவர்கள் சேமிப்புப் புத்தகம் ஏனைய தஸ்தாவேஜுக்களுடன் சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு (பி. எஸ் சேவிஸ் ஸ்ரேசன் ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்) 19.05-92 தொடக்கம் 31-05-92 ஆம் திகதிக்குள் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகாமையாளர்

(சி/4433) ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

அதனை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதுவரைகாலமும் இதன் இறக்குமதி உரிமை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திடம் அளிக்கப்பட்டிருந்தது. இதனை தனியாரும் இறக்குமதி செய்ய அனுமதி அளித்தால் பாவனையாளர்கள் குறைந்த விலையில் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சூட்டிக் கௌரவித்தனர் இவ்வாறு அவர் கூறினார்.

சிறப்புரை வழங்கிய கடற்புலிகள் யாழ் - மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு, ஸ்ரனிமாஸ்டர் பேசுகையில்:

''யாழ் - குடாநாட்டில்நாட்டுக் கூத்தின் வளர்ச்சி கத்தோலிக்க சமுதாயத்தில் வளர்ந்ததென்றால் மறுக்கக் கூடிய ஒன்றல்ல. இத்தகைய கூத்துக்களில் ஈடுபட்டவர்களைக் கூத்தாடிகள் என்று கழித்துவைத்த காலத்தில் 'பூந்தான்' யோசேப்பு அவர்

## புதிய பி.பி.ஸி. முகவர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பி. பி. ஸி. முகவராக சுக் நுவோஸ் நியமனம் பெற்றுள்ளார். கிறிஸ்தோப்பர் மொறிஸ் மாற்றலாகிச் செல்ல உள்ளார்.

புதிதாக நியமனம் பெற்ற முகவரும், கிறிஸ்தோப்பர் மொறிசும் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம்வந்து திரும்பினர்.

ஆகியன வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி தகுதியானவரின் விபரங்களை இம் மாதம் 31 ஆம்திகதிக்கு முன் அனுப்பித்தருமாறு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துக்கல்விப் பணியாளர்களையும் கேட்டுள்ளார்.

நிதி ஒதுக்கீடும், முறையான பட்டுள்ளது.

தகைமையுள்ள ஆசிரியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஜூலை 31, 1989 இல இருந்து மேற்படி நிலுவைகள் வழங்கப் படவுள்ளன, இதற்குப் பின் ஒன்றுக்கு மேற்பட்ட மொழியில் சித்திபெற்றவர்களுக்கு, அவர்கள் சித்திபெற்ற தேதியிலிருந்து ஊக்குவிப்பு வழங்கப் படவுள்ளது.

## உடவளவ வன மிருகங்கள் வெளிநாட்டு நிறு. விற்பனை

(கொழும்பு)

உடவளவ வன மிருகங்கள் தேசிய சரணாலயத்தை உல்லாச விடுதி அமைக்க வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்ய மகாவலி அபிவிருத்தி சபை முடிவெடுத்திருப்பதை வனமிருகங்கள் பரிபாலன திணைக்களமும், சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் கண்டித்துள்ளன.

உடவளவ சரணாலயத்தில் இருபது ஏக்கர் நிலத்தை தவிற்க சூழல் ஆலோசனைக் குழுவின் முன் அனுமதியின்றி மகாவலி அபிவிருத்திச்சபை கேள்விப் பத்திரங்கள் கோரியிருப்பதாக சூழல் ஆலோசசனைக் குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வன மிருகங்கள் மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம், மகாவலி அபிவிருத்திச் சபையின் இந்த முடிவு வனமிருகங்களின் பாதுகாப்பைப் பெரிதும் பாதிக்கும் என்று அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளன.

## வவுனியா பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்த சிங்களவரை தமிழ்க் குழு மிரட்டல்

வவுனியாப் பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்திருந்த சிங்கள இளைஞர் சிலரைப் பயமுறுத்தியும், அவர்களைப் பலவந்தமாக வெளியில் எடுக்கவும் இராணுவத்துக்கு ஆதரவாக ஒரு தமிழ் குழுமுயற்சித்ததாகத்தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது.

தமிழ்க் குழு, காலஞ்சென்ற தமது தலைவரின் ஞாபகார்த்தமாக வவுனியாவில் அவரின் படத்தைத்தாங்கிய சுவரொட்டிகளை ஒட்டியது, இதனைச் சிங்கள இளைஞர்கள் நையாண்டிசெய்துள்ளனர் இருதரப் பினருக்குமிடையில் தகராறுமுற்றியதையடுத்துச் சிங்கள இளைஞர்கள் வவுனியாப் பொலிஸ்சில் பாதுகாப்பிற்காகத் தஞ்சமடைந்தனர். வவுனியாப் பொலிசில் வைத்துத் தமிழ் குழு சிங்கள இளைஞர்களை அச்சுறுத்தியது.

நிலைமை மோசமானதையடுத்து வடபகுதி இராணுவ தளபதி மேஜர் டென்சில் ஹொப்பக்கடுவ மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தலையிட்டுச் சமாதானம் செய்து வைத்தனர்.


எந்த வகை பத்திரிகைத் தாளிலும் மட்டை (BOARD) களிலும்

மனம் நிறைந்த
தரம் குன்றாத

அச்சு வேலைகளுக்கு

தமிழ், ஆங்கிலம்
ஆகிய மொழிகளில்
துண்டுப் பிரசுரங்கள்
தொடக்கம்
பாரிய புத்தகங்கள்
வரை
பொறுப்பேற்கப்படும்

ஈழநாதம்
(அச்சக வர்த்தகப் பகுதி)
மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்



## நினைவு கூருகின்றோம்---
## 1992-05-19

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

அகிலன் (சின்னத்துரை சிவபாலன் -ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை, வவுனியா)

குட்டி/சூட்டி (கனகசபை கிருபாகரன் - மாசார், பளை)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய

★ சண்முகம் நாகராஜா (முறக்கொட்டாஞ் சேனை, மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு கல்வியங்காட்டில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

மோகன் (க மோகனதாஸ் - பளுகாமம், மட்டக்களப்பு)

மதவாச்சியில் பாரவண்டியொன்றினை வழிமறித்து கொள்ளையில் ஈடுபட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் வண்டியுடன் தீமூட்டிக் கொல்லப்பட்ட சாரதி மற்றும் ஊழியர்களான மூன்று தமிழர்கள்.

1989-ஆம் ஆண்டு வவுனியா -- கோழியா குளப் பகுதியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய.

கப்டன் மணியம் (இராசேந்திரம் வேதநாயகம்- புதுக்குடியிருப்பு)

உரும்பராயில் இந்தியப்படையினரால் சடலமாக ஒப்படைக்கப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4429)

# பிரபாகரனைத் தேடி அழித்து விடுமாறு டில்லி அவசர உத்தரவு வழங்கியது

## சிந்தனைக்கு

அரசியலில் நேர்மை, வலிமையிலிருந்து பிறப்பது கபடம், பலவீனத்திலிருந்து பிறப்பது.

- நிக்கலாப் லெனின்

ஈழநாதம்

51, ஐகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 19-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. என் 65

## அரசியல் யதார்த்தம்

இந்திய மத்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோதமான இயக்கம் எனப் பிரகடனப்படுத்தித் தடை விதித்துள்ளமையைக் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களும், சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் ஆகா ஓகோ எனப் பாராட்டி வரவேற்றுள்ளதுடன் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை முடுக்கி விடுமாறு சிறிலங்கா அரசாங்கத்தை கோரியுள்ளன.

புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தன் இந்திய அரசு இராணுவத்தீர்விற்கு பச்சைக் கொடி காட்டியுள்ளதென்கிறார். சிறிலங்கா - இந்திய அரசுகளுக்கு இடையிலான நல்லுறவு காரணமாக விடுதலைப் புலிகளோடு சிறிலங்கா அரசாங்கமோ அல்லது அதன் பிரதிநிதிகளோ எவரும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் வற்புறுத்தியுள்ளன.

ஆனால், விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசாங்கம் விதித்த தடை குறித்து சிறிலங்கா அரசாங்கமோ இராணுவமோ பெரியளவில் அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை. சிறிலங்கா ஜனாதிபதியின் வெளிவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ''எதிர்பார்த்த ஒன்றுதான்'' எனக் கூறியதுடன் இவ்விவகாரத்தை நிறுத்திக்கொண்டார். சிறிலங்கா அரசாங்கத்தின் இம் மந்தப் போக்கு இந்தியத் தூதுவர் என். எம், ஜாவிற்குக் கூட வெறுப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதன்காரணமாகவே ''இந்தியா விதித்துள்ள தடையால் உருவாகியுள்ள கடினமான அரசியல் யதார்த்த நிலையை சிறிலங்கா அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்'' என சிறிலங்காவை மறைமுகமாக எச்சரித்துள்ளார்.

முன்னர் விடுதலைப் புலிகளுக்கு இந்தியா நெருக்கடிகளை ஏற்படுத்திய போதும், தடைகளைப் போட்ட போதும் சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும் மகிழ்ச்சி தெரிவித்தவர்கள்தான். முதன் முதலாக 1986 இல் தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களையும், தொலைத் தொடர்பு சாதனங்களையும் பறித்தபோது சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஏற்பட்ட கொண்டாட்டம் பின்னர் 1987 இல் இந்தியாவும் புலிகளும் மோதிக்கொண்டபோது, புலிகளின் சரித்திரமே முடிந்து விட்டது என்ற சந்தோசம். அன்று வெற்றிப் பெருமிதத்துடன் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான சிறிலங்கா அரசாங்கம் பெரு உவகையுடன் பார்த்துக்கொண்டிருந்தது.

பின்னர் ராஜீவ்காந்தி கொலையுடன் இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட நெருக்குதல்கள் புலிகளின் வரலாற்றின் இறுதிக்காலம் நெருங்கிவிட்டது என சிறிலங்கா அரசாங்கத்தை எண்ண வைத்தது. இதனை சிறிலங்கா இராணுவத் தரப்பும்

விடுதலைப் புலிகளின் உறுதியான இலட்சியப் பற்றும், போரிடும் ஆற்றலும் பற்றி இந்தியாவின் ஆயுதப் படைகள் எப்போதும் ஆரோக்கியமான மதிப்பீடு ஒன்றையே கொண்டிருக்க வேண்டுமென்று இலங்கையின் இந்திய அமைதிகாப்புப் படையின் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் திபேந்தர் சிங் குறிப்பிடுகின்றார். அண்மையில் வெளிவந்த ''ஐ. பி. கே. எப். இன் சிறிலங்கா'' என்ற நூலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்ற உணர்வலைகளையே ''அசைன் மென்ட் இன் ஜவ்னா'' என்னும் தமது நூலில் லெப். ஜெனரல் சர்தேஷ் பாண்டேயும் பிரதிபலித்துள்ளார். ''விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு. அர்ப்பணிப்பு, உறுதி. இலட்சியப் பற்று, மற்றும் ஆற்றல்கள் பற்றி நான் எப்போதும் உயர்வாகவே மதிப்பிடுகின்றேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை அப்போது கொழும்பிலிருந்த இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்சிற் இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் சிலர் பிரபாகரனுக்கு மரியாதை செலுத்துவதாக குறைபட்டுக் கொண்டார்.

திபேந்தர் சிங், மற்றும் சர்தேஷ் பாண்டே ஆகியோர் தமது நூல்களின் மூலம் இந்த முரண்பாட்டின் பின்னணியை தெளிவாக்குவதோடு கிளர்ச்சி எதிர்ப்புப் போர் பற்றிய சுருக்கமான விளக்கங்களுக்கு அப்பால் விடுதலைப் புலிகள் எவ்வாறு பலம் பெற்றார்கள் என்பதுபற்றிய தமது கணிப்பீட்டையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

### தமிழரின் பாதுகாவலர்களாக புலிகள்

இலங்கைத்தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அமைதியும், நீதியும் கிடைக்கச் செய்யும் வகையில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதும், சண்டையிடும் இருதரப்பினரையும் தனித்தனியாக்குவதும் தான் இலங்கையில்அவர்களது பணி எனச் சொல்லப்பட்டது, டில்லியில் அவர்களுக்கு தரப்பட்டவிளக்கத்தின்அடிப்படையிலும், அவர்களது சொந்த ஆய்வின் படி நீண்ட கால

சிப்பாய்களை விடவும் இந்திய இராணுவ அதிகாரிகள் இனப் பிரச்சினை தொடர்பாகவும், அதன் பாதிப்புக்கள் தொடர்பாகவும் இலகுவில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள். இந்தியாவின் வட-கிழக்குப் புறத்திலே முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் போரிட்ட போதும் கௌரவமான தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்ட பின்னர், கிளர்ச்சி எதிர்ப்பு போரை முடிவுக்குகொண்டு வரக்கூடியதாக இருந்தது சீக்கியர்களின் பிரச்சினை இந்திய இராணுவத்தில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தியிருந்ததோடு சிறுபான்மையினரின் அபிலாசைகள் தொடர்பான கேள்விகளையும் எழுப்பியிருந்தது

சீக்கியர்கள் கடந்த 130 வருட காலத்திற்கும் மேலாகவே இந்திய இராணுவத்தில் மிகப் பெரும் எண்ணிக்கையில் இருந்து வருகின்றனர். இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஈடுபட்ட படையினரில் சீக்கியர்கள் 25 சதவீதமாக இருந்துள்ளனர், இதனால் தானோ என்னவோ இந்தச் சீக்கிய அதிகாரி இந்தப்பிரச்சினையில் இராணுவ ரீதியிலாக அல்லாமல் அரசியல் பரிமாணங்களுக்கு முன்னிடம் தருகின்றார்.

(சீக்கியர்களான முன்னாள் இராணுவ அதிகாரிகளில் பல்லாயிரக்கணக்கானோர் பொற்கோயில் வளாகத்தில் அகாலி தளத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தொண்டர் படையில் இணைந்து பணியாற்றியமையும் 'ஒப்பரேஷன் புளூஸ்டார்' என்ற நடவடிக்கை மூலம் இந்திய இராணுவம் அவர்களை அடக்கி பொற்கோயில் வளாகத்தை மீளப் பெற்றதும் இங்கு குறிப்பிடத் தக்கது.)

1987 அக்டோபர் 6-ம் திகதி பலாலிக்கு விரைந்து வந்த இந்திய இராணுவத் தளபதியான லெப்.ஜெனரல் சுந்தர்ஜி அப்போதைய நிலைமை குறித்து அங்குள்ள தனது தள அதிகாரிகளுக்கு சுருக்கமாக விளக்கமளித்தார். விடுதலைப் புலிகள் மீது ஆயுத பலப் பிரயோகம் செய்வது என்னும் அரசியல் முடிவு அதற்கு முன்பாகவே எடுக்கப்பட்டிருந்தது இந்தகடினமான நிலையை மேற்கொண்டால் குறைந்தது இருபது வருடங்களுக்காவது கிளர்ச்சி எதிர்ப்புநடவடிக்கையில் நாம் ஈடுபடவேண்டியிருக்கும் என்றும் நகரமுடியாத

களுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை மேற்கொள்ளுமாறும் விடுதலைப் புலிகளை அழித்து ஒழிக்குமாறும் புதுடில்லியிலுள்ள அதிகாரிகள் நிர்ப்பந்தித்து வந்ததாக தெரிவித்துள்ளனர். ஆனால் இந்தியா பிரபாகரனைக் கொலை செய்ய அல்லது கைது செய்ய உண்மையான அக்கறையுடன் முயலவில்லை என்றே சிறிலங்காவில் பரவலாக கருதப்பட்ட போதிலும் இரண்டு ஜெனரல்களும் சில தகவல்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

1988-ம் ஆண்டு ஜனவரி மாதத்தின் மூன்றாம் வாரத்தில் டில்லியிலும் சென்னையிலும் இருந்து வந்த அவசர செய்திகளில் பிரபாகரன் அவரது மூத்த உதவியாளர் சிலருடன் வலிகாமம் பகுதியின் கடற்கரைப் பகுதியில் நடமாடுவதாகவும் அவரை உடனடியாக கைது செய்ய அல்லது கொலை செய்ய நடவடிக்கை எடுக்கும் படியும் தெரிவிக்கப்பட்டது கீரிமலை மாவிட்டபுரம் தெல்லிப்பழை அளவெட்டி மாசியப்பிட்டி தொல்புரம் பகுதியில் படையினர் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டு வலிகாமம் படைப் பிரிவினர் அவரையும் அவரது சகாக்களையும் கைதுசெய்யும் படி அல்லது கொலை செய்யுபடி பணிக்கப்பட்டனர். (சர்தேஷ் பாண்டே பக் 102)

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் மூளாய் பகுதியில் பிரபாகரன் நடமாடுவதாகக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் பரா துருப்பினர் அப் பகுதியில் குவிக்கப்பட்டனர் ஆனால் துருப்பினர்களின் வருகை பற்றி அறிந்து

பிரபாகரன் இல்லாவிட்டால் புலிகள் இயக்கம் சிதைவடையும் என்றும், சீர் குலையும் என்றும் நம்புவதோடு திரும்பத்திரும்ப அதை வலியுறுத்தியும் வருகின்றன.

கிளர்ச்சி எதிர்ப்புப் போரில் அனுபவப்பட்டும் அரசியல் சமூக நிலைமைகளால் கட்டுப்படுத்தப்பட்ட இந்திய இராணுவ அதிகாரியின் மதிப்பீடு குறிப்பிடத் தக்க வகையில் வேறாகவே இருக்கிறது.

போர் முனையில் இருக்கும் சிப்பாயின் கருத்தும், ஒரு அரசியல் தலைவர் அல்லது தலைமை நிலைய அதிகாரியின் கருத்தும் பெரும்பாலும் ஒத்துப் போவதில்லை. தனது சி.ஐ அறிக்கையின் பிரகாரம் சர்தேஷ் பாண்டே யாழ்ப்பாண மக்களுடன் நெருங்கிய நல்லுறவைவளர்க்கவும் அதன் மூலம் புலிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து தனிமைப்படுத்தவும் முற்பட்டிருந்தார் ஆனால் அவரது இந்த முயற்சி விடுதலைப் புலிகள் மக்கள் மத்தியில் பெற்றுள்ள செல்வாக்கை உணர வைத்ததோடு டில்லியினால்வளர்க்கப்பட்ட ஏனைய குழுக்கள் தமது திட்டத்தையே செயலிழக்க வைக்கும் என்பதையும் யாழ்ப்பாண மக்களிடமிருந்து இந்திய இராணுவத்தை தனிமைப்படுத்தும் என்பதையும் புரிந்து கொள்ள வைத்தது. எந்த இலக்குமற்ற கட்டுப்பாடில்லாத சந்தர்ப்ப வாதம் மிகுந்த, கோழைகளான, ஊழலும் கொடூரமும் மலிந்த, இந்த சுயநலக் குழுக்கள் காடையர்கள் போலவும் குண்டர்கள் போலவுமே செயற்பட்டனர். (பக்கம்- 36)

இந்திய அமைதிப் படையின் தளபதியாக இலங்கைக்கு வந்திருந்த லெப்-ஜெனரல் திபேந்தர் சிங் ''ஐ பி. கே. எப் இன் சிறிலங்கா'' என்றொரு நூலையும், யாழ்ப்பாணப் பிராந்தியததில் இந்திய இராணுவத் தளபதியாக இருந்த லெப். ஜெனரல் சர்தேஷ் பாண்டே ''அசைன்மென்ட் இன் ஜவ்னா'' என்றொரு நூலையும் அண்மையில் வெளியிட்டுள்ளனர். இந்த நூல்களிலிருந்து சில பகுதிகளை எடுத்துக்காட்டி ஐலன்ட் பத்திரிகையின் கட்டுரையாளர் தாரகி ''இந்தியர்களால் புலிகளை அழிக்க முடியுமா?'' என்ற தலைப்பில் கடந்த ஞாயிறு ஐலன்ட் இதழில் எழுதிய கட்டுரையின் மொழியாக்கம்.

### புலிகளை அழிக்க முடியாது

இந்திய இராணுவம் ஏன் பிரபாகரனைக் கைது செய்ய அல்லது கொலை செய்யவில்லை என்று பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன இதே அளவுக்கு இந்திய இராணுவத்திற்கு பிரபாகரனைக் கொலை செய்ய உத்தரவு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுப்பப்பட்டுள்ளது இவை சாத்தியப்படுமா என்பதற்கு அப்பால் இத்தகைய சூழலில் ஒரு தனி மனிதனை இலக்கு வைத்து அழிப்பது அல்லது பாதுகாப்பது என்பதைவிடவும், ஒரு விடயத்தை நாம் நினைவில்கொள்ள வேண்டும். அது விடுதலைப் புலிகள் ஆற்றல் மிகுந்த இரண்டாம் கட்டத் தலைமை ஒன்றைக் கொண்டிருக்கின்றனர் என்பதும் பிரபாகரன் இல்லை என்ற நிலையிலும் விடுதலைப் புலிகள் அமைப்பு சிதைவடைந்து போகாதுஎன்பதும் ஆகும். (பக்கம் 125)

கிளர்ச்சி எதிர்ப்பு நிபுணர்கள் குறிப்பிட்ட இலக்கத்தைச் சேர்ந்த இராணுவத்தை மட்டும் கொண்டிருக்காமல் இருந்தால் தமது மேலிடத்திடம் சமூக பொருளாதார அரசியல் உளவியல் இராணுவக் காரணிகளின் சமபலமுடைய ஆற்றல் நிறைந்த போர் திட்டத்தைத் தான் எதிர்பார்ப்பார்கள். இந்திய அமைதிப் படையினரும் அதனைத் தான் கேட்டு நின்றார்கள் ஆனால் அது அவர்களுக்கு கிடைக்கவில்லை. பிரபாகரனைக் கொலை செய்ய வேண்டும் என்ற டில்லியின் அடிப்படை விருப்பமானது விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடும் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய இராணுவத்தினர் கிளர்ச்சி எதிர்ப்பு போர் பற்றி கொண்டிருந்த அடிப்படை எண்ணங்களுக்கே புறம்பானதாக இருந்தது. கொழும்பிலுள்ள இந்திய தூதுவரகமோ, டில்லியிலுள்ள இராணுவத் தலைமையகமோ அல்லது றோவினரோ விடுதலைப்புலிகள் பற்றித் தேவையான தகவல்களை வழங்கவில்லை. இந்தத் தோல்வியே மிகவும் பிரபல்யமாகியது.

சர்தேஷ்பாண்டே சரியாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதைப்போல இனப்பிரச்சினை

...னைத்தது. இதனை சிறிலங்கா இராணுவத் தரப்பும் பெரிதாக வரவேற்றது. இந்தியாவின் நட்புநாடி இராணுவ அதிகாரிகள் டில்லிக்கு விஜயமும் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகள் வடக்கிலும் கிழக்கிலும் முடுக்கியும் விடப்பட்டன. ஒப்பரேசன் வன்னி விக்கிரம, ஒப்பரேசன் சிக்சரி, ஒப்பரேசன் வலம்புரி, ஒப்பரேசன் கிறின் பெல்ட் என பல இராணுவ நடவடிக்கைகள் தொடராக இடம் பெற்றன.

ஆனால் இராணுவம் தான் எதிர்பார்த்த வெற்றி எதையும் பெறவில்லை. மாறாகப் புலிகளின் தலைமையால் வகுக்கப்பட்ட புதிய போர் யுக்திகள் சிறிலங்கா இராணுவத்திற்குப் பாரிய உயிர் இழப்பையும், தளபாட இழப்பையும் ஏற்படுத்தியது. அத்தோடு இராணுவமும் தனது மனோபலத்தை இழந்தது.

இந்நிலையில் சிறிலங்கா அரசு என்ன செய்ய முடியும்? விடுதலைப் புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியும்? விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் ஒடுக்குவதற்கு விருப்பம் இல்லாமலா சிறிலங்கா அரசாங்கம் இராஜதந்திர அரசியல் நடத்திக் கொண்டிருக்கின்றது, 1990 யூனில், ஆரம்பிக்கப்பட்ட போரை வெற்றி கொள்வதற்குச் சிறிலங்கா அரசு தன்னால் ஆன சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. பாதுகாப்புச் செலவினத்திற்கென வரவு - செலவுத் திட்டத்தில் பெரும் தொகை நிதியை ஒதுக்கியிருந்த அரசாங்கம் பெரும் இராணுவத் தளபாடங்களையும் கொள்வனவு செய்தது இராணுவ ஆளணிகளையும் பல மடங்கு அதிகரித்தது. ஆனால் வெற்றிதான் கிட்டவில்லை.

ஆகையால், புலிகளுக்குத் தற்பொழுது இந்தியா ஏற்படுத்திய தடையினால் சிறிலங்கா மகிழ்ச்சி கொள்வதற்கு என்ன இருக்கின்றது? விடுதலைப் புலிகள் என்ன கொழும்பிலா இருக்கின்றார்கள். தான் விரும்பியவாறு அவர்களை ஆட்டிப்படைக்க. அல்லது புலிகள் என்ன பிறர் காலிலா நிற்கின்றார்கள் விரும்பியவுடன் மண்டியிட வைக்க.

புலிகள் எப்பொழுதும் தமது சொந்தக் காலில், உயர்ந்த மனோதிடத்துடனும் சொந்த மக்களின் ஆதரவுடன், சொந்த மண்ணிலும் நிற்கின்றார்கள். அவர்களை இராணுவ ரீதியில் ஒடுக்குவதென்பதும், புறந்தள்ளி வைத்துவிட்டு அரசியல் தீர்வு காண்பதென்பதும் நடைமுறைக்குச் சாத்தியமற்றது. இந்த யதார்த்தத்தை சிறிலங்கா அரசாங்கமும் இராணுவமும் தெளிவாகப் புரிந்து கொண்டமையே புலிகள் மீதான தடை குறித்து பெரியளவில் அவர்கள் அலட்டிக் கொள்ளாமைக்குக் காரணம். இதனைக் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களும், பேரினவாதப் பத்திரிகைகளும் புரிந்து கொள்ளுதல் அவசியம். வெறும் வாய் சப்புவதில் பயனில்லை.

---

...யிலும், அவர்களது சொந்த ஆய்வின் படி நீண்ட காலமாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் போராட்டத்தின் பெறுபேறாக விடுதலைப் புலிகள் முகிழ்த்து எழுந்தது எனவும், வீரப்பராக்கிரமங்கள் நிறைந்த செயல்களைச் சாதிக்கக் கூடியவர்கள் எனவும் புரிந்து கொண்டனர். வாழ்க்கைப் போராட்டத்தில் மிகவும் துன்பப்படும் தமிழ் மக்களின் பாதுகாவலனாக விடுதலைப் புலிகள் கருதப்பட்டனர். இதனால் இயல்பாகவும், தவிர்க்க முடியாமலும் இராணுவ ரீதியான அணுகுமுறை என்பது பாதிக்கப்பட்டது.

### இந்திய இராணுவமும் சிக்கல்களும்

உலகின் மற்றெப் பாகத்திலும் இருக்கும் இராணுவச் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையில் நாம் ஈடுபடவேண்டியிருக்கும் என்றும் நகரமுடியாததொரு நிலைக்கு இட்டுச் செல்லப்படுவோம் என்பதும் லெப் ஜெனரல் சுந்தாஜிக்கு எனது ஆலோசனையாக இருந்து தோல்வியடைய வேண்டி வரலாம் என்ற அச்சம் எனக்கு இருப்பதாக கண்டிக்கப்பட்டபோது எனது பதில் தோல்வியைப் பற்றி அல்ல யதார்த்தத்தை பற்றியே கவலைப்படுகிறேன் என்று இருந்தது எனக் கூறுகிறார் லெப் ஜெனரல் திபேந்தர் சிங்.

### பிரபாகரனை கொலை செய்ய உத்தரவு

இரண்டு ஜெனரல்களுமே தமது புத்தகங்களின் மூலம் தொடர்ந்தும் விடுதலைப்புலி...

...யில் பரா துருப்பினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர் ஆனால் துருப்பினர்களின் வருகை பற்றி அறிந்து கொண்ட அவர் அதிலிருந்து தப்பித்துக் கொண்டுவிட்டார் பிரபாகரனைக் கொலை செய்வதன் மூலம் விடுதலைப் புலிகளை அழித்துவிடலாம் என்ற டில்லியின் எண்ணம் வடக்கு கிழக்குப்பகுதியில் போரில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுடனும் பகிரப்பட்டிருந்ததா என்ற கேள்வி இங்கு எழுகின்றது

### சுயநலம் நிறைந்த ஏனைய தமிழ்க் குழுக்கள்

இந்திய வெளிவிவகார அமைச்சும், றோவும், விடுதலைப் புலிகளுக்கெதிரான எல்லா தமிழ்க் குழுக்களும்...

...மலிந்த. இந்த சுயநலக் குழுக்கள் காடையர்கள் போலவும் குண்டர்கள் போலவுமே செயற்பட்டனர். (பக்கம்- 36)

வரலாறு சமூகவியல் மற்றும் அரசியல் ரீதியாக இந்திய இராணுவம் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன், கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கையில் குறிப்பாக இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டில் புலனாய்வு அதிகாரிகளிலேயே பெருமளவு தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஆகவே தான் பிரபாகரனைக் கொலை செய்வது பற்றிய விடயத்தில் கிளர்ச்சி எதிர்ப்பு நிபுணர்களுக்கும் டில்லிக்கும் இடையே கருத்து வேறுபாடு எழுந்தது இது விடயத்தில் திபேந்தர் சிங்கின் கூற்று கவனிக்கத்தக்கது.

...விளங்கவில்லை. இந்தத் தோல்வியே மிகவும் பிரபல்யமாகியது.

சர்தேஷ்பாண்டே சரியாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதைப்போல இனப்பிரச்சினையில் பண்டிதர்கள் கருத்தரங்கவிற்பன்னர்கள், மற்றும் பொழுதுபோக்கு புலவர்கள், சிறிலங்கா சமூகத்தைப் பற்றிய சரியான மதிப்பீட்டைக் கொண்டிருக்கவில்லை. இந்திய புலனாய்வுத் துறையின் உயர்மட்ட அதிகாரிகள் சிலர் சில தமிழ்க் குழுக்களிடமிருந்து பெருமளவில் லஞ்சம் பெற்றிருந்தனர் என்பதை லெப் சர்தேஷ்பாண்டே அறியாமல் இருந்திருக்கக் கூடும்.

தமிழ்த் தீவிரவாதத்திற்கு எதிராகப் போராடிய இந்திய இராணுவ அதிகாரி ஒருவரின் கருத்துக்கள் என்ற வகையில் வரலாற்றுக் கடமை இந்த நாலுக்குண்டு.

---

## வன்முறையைக் கைவிட நக்சலைட்டிற்கு கோரிக்கை

வன்முறையைக் கைவிட்டு தேசியவாழ்க்கையின் உயிரோட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஆந்திர பிரதேச முதலமைச்சர் ஜனார்த்தனன் ரெட்டி நக்சலைட்டுக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் ஹைதராபாத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அவர் இக்கோரிக்கையை விடுத்தார்

## தி.மு.க. மீதுவழக்கு; ராவிடம்அனுமதிகோரிக்கை

[சென்னை]

தமிழ் நாட்டில் 1971, 1975 ஆகிய ஆண்டுகளில் தி.மு.க. ஆட்சியின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் சில குற்றச்சாட்டுக்களை விசாரிக்க சர்க்காரியா குழுஅளித்த அறிக்கையின் அடிப்படையில் தி.மு.க.வினர் மீது வழக்குத் தொடருமாறு பிரதமர் பி வி. நரசிம்மராவை தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. ராமமூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சராக மு கருணாநிதி இருந்தபோது தான் பத்திரிகைகள் அடிக்கடி அச்சுறுத்தப்பட்டதாகவும் பத்திரிகைச் சுதந்திரம் குறித்து அவர் இப்போதுபேசுவது வியப்பாக இருக்கிறது என்றும் வாழப்பாடி ராமமூர்த்தி கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில்வெளியிட்ட அறிக்கை ஒன்றில்குறிப்பிட்டிருக்கிறார்.

## துருப்பு - ஆர்ப்பாட்டக்காரர் மோதல் பாங்கொக்கில் 20 பேர் பலி

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் பாதுகாப்பு படையினருக்கும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரருக்கும் இடையே நிகழ்ந்த மோதல்களில் சுமார் இருபதுபேர் வரையில் கொல்லப்பட்டிருப்பதாக தாய்லாந்தில் இருந்து வெளியான செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் அரச கட்டிடங்களுக்குள் நுழைவதை தடுத்து நிறுத்துவதற்கு அனுப்பி வைக்கப்பட்ட இராணுவத்துக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட மோதலில் இவர்கள் கொல்லப்பட்டனர் நூற்றுக்கணக்கான பீரங்கி வெடிகளின் ஓசையே எங்கும் கேட்கப்பட்டதாகவும் கார்கள் கட்டிடங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டதாகவும் கலகம் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரே பிரதமராக இருக்க வேண்டும் என்று கூறி தற்போதைய பதவியில் இருப்பவர் இராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரியே இவ் ஆர்ப்பாட்டம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## பிலிப்பைன்ஸ் தேர்தல்; ராமோஸ் முன்னணியில்

(மணிலா)

பிலிப்பைன்ஸில்நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிடல்ராமோஸ் முன்னணியில் இருப்பதாக நேற்றுமுன்தினம் காலைஅறிவிக்கப்பட்டது வாக்குகள்எண்ணும்பணி இன்னமும் முடிவடையாத நிலையிலும் பிடல்ராமோஸுக்கு அடுத்தபடியான வாக்குகளைப்பெற்று இரண்டாம் நிலையில் இருக்கும் முன்னாள் நீதிபதியான திருமதி மெரியன்சண்டியாகோ தேர்தலில் மோசடிகளும், முறைகேடுகளும் இடம்பெற்றிருப்பதாகக் கூறியுள்ளதுடன் எதிர்ப்புக் கூட்டங்களை நடத்தப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

## தமிழ் இசை பேரகராதி

பாரதிதாசன் பல்கலைக் கழக வெளியீடாகத் தமிழ் இசைப் பேரகராதி ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

வி பி. கே சுந்தரம் அவர்களால் ஆக்கப்பட்ட இந்தப் பேரகராதி திங்கட்கிழமை அன்று பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நடந்த விழாவில் வெளியிடப்பட்டது.

ஈழநாதம்

# நிலைமையை கருத்திற் கொண்டு சிறிலங்கா நடக்க வேண்டும்

## இந்தியத் தூதுவர் ஜா

[கொழும்பு]

சிறிலங்கா அரசு தனக்கு இயல்பாக எது பொருத்தமென்று எண்ணுகிறதோ அதைச் செய்யலாம். முடிவு எதுவாயிருப்பினும்பிரச்சினையின் உண்மை நிலையை மனதிற் கொள்ளவேண்டும் என்று இந்தியாவின் உயர்ஸ்தானிகர் நாகேந்திரநாத் ஜா ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானத் தீர்வை நோக்கி கொழும்பு முன்சென்றால் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்றகேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்அதிர்ஷ்டவசமாகவோ துரதிர்ஷ்டவசமாகவே முழு விவகாரத்திலும் இந்தியா வெறும் பார்வையாளர் என்று தான் குறிப்பிடுவதை அனேகமான சிறிலங்கா மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கையாகும் சிறிலங்காவின் வடக்குக் - கிழக்குப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைக் காண்பதற்கு இந்தியாவின்சேவையைசிறிலங்கா ஏற்றுக்கொண்டது என்பதை மறந்து விடக்கூடாது. இது பற்றிய எமது கொள்கையில் மாற்றமெதுவுமில்லை. ஐக்கிய சிறிலங்காஎன்றஅமைப்பினுள் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் சிறுபான்மையினரின் நியாய பூர்வமான அபிலாசைகளை அங்கீகரித்து-நிறைவேற்றும்படி சிறிலங்காவை ஏற்கச் செய்தது. அதிர்ஷ்டவசமாகவோ, துரதிர்ஷ்டவசமாகவோ, அதிர்ஷ்டவசமாக என்றுதான் சொல்லவேண்டும் சிறிலங்காவின் பிரச்சினைகள் பல வழிகளில் இந்தியாவைப் பாதிக்கிறது உங்களுக்கு அது தெரிந்ததே இது சாதாரணமாக ஒரு உணர்ச்சிபூர்வமான பிரச்சினை அல்ல என்றும் அகதிகள் பிரச்சினையுடன் சேர்த்தாற்போல் பல பிரச்சினைகள் உருவாகின்றன. இந்தப் பிரச்சினையில் இதுபற்றிதொடர்பில்லாமல் அல்லது சம்பந்தப்படாமல் எவ்வாறு இந்தியாவால் இருக்க முடியும் சிறிலங்காவின் தமிழரின் அபிலாசைகள்அனைத்துப் பிரச்சினைகளுக்குமான அடிப்படைக்காரணமாகும். இந்தப் பிரச்சினையை ஒரு ஒற்றை ஆட்சி அமைப்பின் கீழ் தீர்ப்பதோ அல்லது ஒரு சமஷ்டி ஆட்சியமைப்பில் தீர்ப்பதோ என்ற முடிவை சிறிலங்காதான் மேற்கொள்ளவேண்டும் என்றும்,

முன்னொரு சமயம் இந்தப் பிரச்சினை குறித்து எனது கருத்தைக் கேட்டபோதுநான் எனது அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்தினேன் முடிவு கசப்பாக இருந்தாலும் ஒருவர் உண்மைக்கு முகம் கொடுக்க வேண்டும். அப்போது கூறியதைத்தான் நான் இப்போதும் கூறுகிறேன். சிறிலங்காவின் பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி அமைப்புத்தான் சிறந்த வழியாகும் இதை நான் கூறியிருந்த போதிலும் இந்தக் கருத்தை நான் அழுத்த விரும்பவில்லை காரணம் அது அல்ல இன்றைய பிரச்சினை அரசியல் அமைப்புச் சட்டத்தில் 13 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து அதிகாரப் பரவலாக்கம் என்ற எண்ணக்கருவை நடைமுறைப் படுத்தியுள்ளீர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உங்கள் ஜனாதிபதியும், அரசும்மனதில்கொண்டிருக்கும் திட்டத்திற்கு மேற்படி 13 ஆவது திருத்தம் ஒரு ஆரம்பமாக அமையலாம். இந்த நிலைப்பாட்டைத்தான் நாம் முதலிலிருந்து கடைப்பிடித்து வருகிறோம். நான் இதனை முன்பேதெரியப்படுத்திபிருக்கிறேன். ஆகவே இது பற்றி மேலதிகமாக இன்று சொல்வதற்கு ஒன்றுமில்லை என்றார் அவர்.

# எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சியை ஆட்டம்காணவைக்கும் 'ஜெ' ஆட்சி

(சென்னை)

புரட்சித் தலைவர் பெயரை கெடுப்பதுடன் அவர் உருவாக்கிய கட்சியை ஆட்டம் காணவைப்பதாகவும் உள்ளது ''ஜெ'' யின் ஆட்சி என எம். ஜி. ஆர். ஆட்சிக்காலத்தில் அவர் கூடவே இருந்து இன்று வாயில்லாப் பூச்சியாக இருக்கும் ஒரு மாஜி பத்திரிகையாளர் தெரிவிக்கிறார்.

''ஜெ'' யின் ஆட்சி பற்றி அவர் தொடர்ந்து கூறுகையில் மூன்னைய காமராஜராகட்டும், கலைஞராகட்டும், அண்ணாவாகட்டும், மரியாதையின்னா என்ன என்று தெரிஞ்சு வைச்சாங்கா. ஜனங்கள் அவர்கள் செய்யிற நன்மை தீமை பற்றி எவ்வளவு விமர்சனம் செய்தாலும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை பத்திரிகைகாரர்களிடம் காட்டுவதில்லை ஆனா இந்த அம்மா கூடஇருப்பவர்களை தூண்டிவிட்டு பத்திரிகை காரர்களை ஆட்டம் காட்டுகிறார் எம். ஜி. ஆரிடமிருந்து கற்றுக் கொண்டவர்கள் நடந்து கொள்ளும் விதத்தில இந்த அம்மா நடந்து கொள்கிறார்கள்? எம். ஜி. ஆருக்கு ரொம்ப வேண்டியவர்களை யெல்லாம் தடா சட்டத்தை கையில் வைத்துக் கொண்டு ஏதாவதொரு வில்லங்கத்தில் மாட்டி உள்ளே போட்டு விடுகிறார் எனத் தனது உள்ளக்குமுறலை வெளிப்படுத்துகிறார் அப்பத்திரிகையாளர்.

மேலும் புரட்சித்தலைவர் பெயரைச் சொன்னால் கை தட்டக்கூடப் பயப்படுகிறார்கள். இதற்கு அம்மா தயவில்லாமல் போய்விடும் என்ற அச்சம் தான் காரணம். அவர் பெயரைச் சொல்லி ஆட்சிக்கு வந்து விட்டு இன்னிக்கு அவர் நினைவுகளையே அடித்து விரட்டுவதுதான் ''ஜெ'' ஆட்சி என்கிறார் மதுரை அ. தி. மு. க பிரமுகர் ஒருவர் (தற்போது அரசியலில் இருந்துஒதுங்கிவிட்டார். அவர்) மேலும் கொஞ்சம் கொஞ்சமாக கட்சியை உருவாக்கிய தலைவர் பெயரையே இந்த அம்மா எடுத்துவிடும் போல இருக்குது என்றார்.

# சென்னையில் ஐந்து இலங்கைத் தமிழர் கைது

சென்னையிலுள்ள இலங்கைத் தமிழருக்கான விசேட முகாம் ஒன்றிலிருந்து இரண்டு பெண்கள் உட்பட ஐந்து இலங்கைத்தமிழர் கடந்த சனியன்று கைது செய்யப்பட்டனர்.

நித்தியானந்தன், சிவரூபன் அல்லது சுரேஸ்குமார், சண்முகவடிவேலு, சாந்தி, செல்வலக்சுமிஅல்லது பாப்பா ஆகிய ஐவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இவர்களை ராஜீவ் கொலை வழக்கில் புலன்விசாரணை நடாத்தும் இந்திய பொலிஸ் விசாரணைக்குழு கைதுசெய்தது. இவர்களை இம்மாதம் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி தனி நீதிபதி சித்திக் கூறியுள்ளார்.

இவர்கள் மீதும் ராஜீவ் கொலை வழக்குத் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவர்களையும் சேர்த்து இவ்வழக்கில் 27பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.இதுதொடர்பாக நூறுபக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதலுக்காக டில்லிக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# புனர்வாழ்வு திட்டங்கள் விரிவு படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நிவாரண புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தை போரூட் நிறுவனம் விரிவுபடுத்தியிருக்கிறது. மேற்படி வேலைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளதுடன் நிதி ஒதுக்கீட்டையும் அதிகரித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மிகவும் பாதிக்கப்பட்ட கஷ்ரப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் மேற்படி நிறுவனம் உலர் உணவு சுயதொழில் முயற்சி, குடியிருப்பு கல்வி ஊக்குவிப்பு போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் மேற்படி நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இவ்வாறான நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.போரூட் நிறுவனத்தின் பணிப்பாளர் அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்து இங்கு மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து விபரம் அறிந்து கொண்டார். இதனைத்தொடர்ந்து இப்பகுதிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிப்பதற்கும் அவர் கொள்கையளவில் சம்மதம் தெரிவித்திருந்ததாக கூறப்படுகிறது. அத்துடன் செயற்திட்டப் பிரதேசத்தை விரிவு படுத்துவதற்கும் இணக்கம்தெரிவிக் கப்பட்டிருக்கிறது

# மாவீரர் வெற்றி நினைவாக சனசமூக நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வெற்றியின் நினைவாக வறுத்தோலைக்கிராமத்தில் வெற்றி சனசமூக நிலையம் ஒன்றை கடந்த பதினைந்தாம்திகதிமாவீரர் வெற்றியின் தாயார் மங்களவிளக்கேற்றித் திறந்துவைத்தார்.

சுளிபுரம் மேற்கு வறுத்தோலைக் கிராம மக்களின் கல்வி அறிவு வளர்ச்சிக்காக கடற் புலிகளின் வலிவடக்கு போராளிகளால் வெற்றி (சோமசுந்தரம் சுபாகரன்) சனசமூக நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. அன்றைய தினம் சுளிபுரம் கடற்புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் வேதியனின் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது

இதில் கடற்புலிகளின் காட்டுபுலம் பிரதேச பொறுப்பாளர் அழகன், வலிவடக்கு கடற்புலிகளின் மகளிர் படைப் பொறுப்பாளர் தேன்மொழி சுளிபுரம் கடற்புலிகளின் மகளிர் படைப் பொறுப்பாளர் அருந்ததி அவர்களும் சனசமூக நிலையத்தின் சார்பில் செல்வி வசந்தலீலா மற்றும் வலிவடக்கு கடற்புலிகளின் சார்பில் தனபாலசிங்கம் (தனம்) ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

இறுதி நிகழ்வாக கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன இதில் மாதகல் கடற்புலிகளின் கலை பண்பாட்டவையின் ''கைவிலங்கு''' 'பயணங்கள்'' நாடகங்களும் பரத நாட்டிய நிகழ்வும் இடம் பெற்றன.

(ச)

# ஆப்கான் பேச்சுவார்த்தை; உடன்பாடு ஏற்படும் சாத்தியம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அரசாங்கத்திற்கும் கிளர்ச்சிப்படை முஜாகிதீன் தலைவருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இருவருக்கும் இடையில் உடன்பாடு ஏற்படலாம் என்றும் ஆப்கானிஸ்தான் அதிபர் பேராசிரியர் சுட்கித்துல்லா மொஜாரெட்டி கூறியுள்ளார்.

காபூலில் நேற்று முன்தினம் செய்தியாளரிடம் பேசிய முடிவான அமைதியொன்றை ஏற்படுத்த அவர் ஒப்புக் கொள்வாரென நம்பிக்கை வெளியிட்டுள்ளனர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து குல்புதீன் எக்மத்தியார் தன்னுடைய படைகளை விலக்கிக் கொள்வாரெனவும் விரைவிலேயே அமைச்சரவையில் அவர் சேர்வாரெனவும் தாம் நம்புவதாக தெரிவித்தார்.

அரசாங்கத்தில் இணைவதற்கான விருப்பத்தை தெரிவித்து கடிதமொன்றை எக்மத்தியார் தனக்கு அனுப்பி வைத்திருப்பதாக கூறிய ஆப் தோஸ்ரோமின் துருப்புக்கள் காபூலில் இருந்து வெளியேறிச் செல்வதாகவும் அவர்களுக்கு பதிலாக முஜாஹிதீன்கள் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் பொது மன்னிப்பு ஒன்று வழங்குவதில் தம்முடைய அரசின் உறுதியை அதிபர் மீண்டும் வலியுறுத்தினார்.

# போஷாக்கு பராமரிப்பு அறிவியல் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் போஷாக்கு பராமரிப்பு பற்றிய அறிவியல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களமும் இணைந்து நடைமுறைப்படுத்த உள்ளன.

இம்மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார் போன்றவர்கள் நீண்டகாலமாக சிறந்த போஷாக்கின்மையால் பாதிக்கப் பட்டிருக்கின்றனர். இப்பாதிப்பைத் தவிர்ப்பதற்காக போஷாக்கு மற்றும் சுகாதார நடைமுறைகள் தொடர்பான தெளிவான அறிவை விருத்தி செய்யும் முயற்சியாகவே மேற்படி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட இருக்கிறது.

இத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக எதிர்வரும் 26 ஆம் திகதி விசேட கருத்த

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதி

# சிறுமியை ஏமாற்றி நகை திருட்டு

(கொழும்புத்துறை)

பாடசாலைச் சிறுமிகளை ஏமாற்றி அவர்கள் அணிந்திருக்கும் தங்க நகைகளைத் திருடர்கள் துணிகரமாக அபேஸ் செய்து வருகின்றனர். கொழும்புத்துறைப் பகுதியில்

# பாராளுமன்ற தெரிவுக்குழு:

மொஜாமெரட்டி கூறியுள்ளார்.

காபூலில் நேற்று முன்தினம் செய்தியாளரிடம் பேசிய அவர் திரு. எக்மத்தியாருடன் சேர்ந்து பேச்சுவார்த்தை நடாத்திவரும் தளபதிகள் மத்தியார் தனக்கு அனுப்பி வைத்திருப்பதாக கூறிய ஆப்கான் பிரதமர் காபூலில் தாக்குதல் நடாத்திய செய்திக்காக எக்மத்தியார் வருந்தி வேதனைப்பட்டாக வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பாதுகாப்பு செலவு

# இந்தியாவும்-பாகிஸ்தானும் குறைக்க வேண்டும்

**- பெனாசிர் பூட்டோ**

(இஸ்லாமாபாத்)

இஸ்லாமாபாத்தில் தேசிய சட்டப்பேரவையில் 1992,93ம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட விவாதத்தைத் தொடக்கி வைத்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவி பெனாசிர் பூட்டோ இஸ்லாமாபாத்தின் பாதுகாப்புச் செலவீனம் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்து உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், சமுதாய வளர்ச்சிக்குத் தேவையான நிதி வசதிகளை விடுவிக்கும் பொருட்டு இந்தியாவும், பாகிஸ்தானும் தத்தமது பாதுகாப்புத்துறைச் செலவீனங்களைக் குறைப்பதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கும் இது பற்றிய பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்குமான தருணம் இப்பொழுது வந்துவிட்டது என்று கூறினார்.

நவாம் ஷெரீபின் ஆட்சியில் லஞ்ச ஊழல் முறைகேடுகள் நிரம்பிக் காணப்படுகின்றன; பொருளாதாரம் மிக மோசமான நிலையிலும், தவறான முறையிலும் நிர்வகிக்கப்பட்டதினால் இந்நாடு நாசத்தின் விளைவுக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது எனவும் பிரதமர் மீது குற்றம் சாட்டிப் பேசினார் பெனாசிர் பூட்டோ.

யாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர்கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறுகழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று அல்வாய் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது இன்று பிற்.பகல்3 30 மணிக்கு யாழ் சென் பற்றிக்ஸ் மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

## ஆலயத்தின்

மேற்படி ஆலயத்தில் வருடாவருடம் நிகழும் விசேடபொங்கல் உற்சவ தினத்தின் ஆரம்ப நாளன்றும் சிறிலங்காஇராணுவத்தினர் ஆலயத்தை நோக்கி எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டபோது ஐந்து மாடுகள் பலியானது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் மேற்படி ஆலய உற்சவ இறுதி நாளாகும். இதன் போது பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்தனர்.

மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பலர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையிலும், யாழ் போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (ச)

## காயமடைந்த

நேசம் (வயது 32 செம்மலை) ந.இந்துசா(வயது6 செம்மலை இவர் தனது வலது கையை மணிக்கட்டுடன் இழந்துள்ளார்) சோ. முருகையா(வயது 24 திருமலை) இ சாந்தினி தேவி (கொக்குவில இவர்செஞ்சிலுவைச் சங்க தாதி) ஆகியோர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ச)

---


## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# பாராளுமன்ற தெரிவுக்குழு; தமிழ்குழுக்கள் புறக்கணிப்பு

(கொழும்பு)

இன்று நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்தினைப் புறக்கணிப்பதென ஆறு தமிழ்க் குழுக்கள் முடிவுசெய்துள்ளன.

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பின்றி சாதகமான முடிவு எதையும் தெரிவுக்குழுவால் எட்டமுடியாது என இக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

தமது முடிவு குறித்து தெரிவுக்குழுவின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## இனப்பிரச்சினையில்

மூலம், தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பது, நடைமுறைச் சாத்தியமற்ற விவகாரம் என்பது, சிறிலங்கா அரசிற்கு தெரியாததல்ல. ஆயினும், இந்த யதார்த்தத்திற்கு புறம்பான பழைய அணுகுமுறையை இந்தியா கடைப்பிடிக்குமாறு அழுத்தம் போட்டுவருவதினால், சிறிலங்கா அரசிற்கு மேலும் சிக்கல் எழுந்துள்ளது.

இன்னொருவிதத்தில் பார்க்கப் போனால், இராணுவ அணுகுமுறைமூலம் புலிகளை ஒடுக்க வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கமாகும். ஆனால், ஒருபுறம் தொடர்ச்சியான இராணுவத் தோல்விகளையும், மறுபுறம் பாரிய பொருளாதார நெருக்கடியையும் சந்தித்து நிற்கும் பிரேமதாசா அரசிற்கு இந்தியா காட்டும் வழி சிறிலங்காவிற்கு மேலும் நெருக்கடிகளை அதிகரிக்கவே செய்யும். எனவே, இந்தியாவின் தடையும், இந்தியா வழங்கும் யோசனையும் சிறிலங்கா நலனுக்கு பாதமாக அமையுமெனமேற்குலகஇராஜதந்திரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

26 ஆம் திகதி விசேட கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறான கருத்தரங்குகள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக நடாத்தப்பட உள்ளது. (க)

# 450 கிலோ தங்க கடத்தல் கொழும்பில் பிடிபட்டது

(கொழும்பு)

கொழும்பு சர்வதேச விமான நிலையத்தினூடாக நடத்தப்பட்ட 450 கிலோகிராம்எடையுடைய தங்கக் கடத்தலொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொம்பியூட்டர் உபகரணங்கள் என்றபெயரில் 950 கிலோகிராம் நிறையுடைய பார்சல்களை கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்று விமான மூலம் தருவித்தது. இந்த பார்சல்கள் விமான நிலையத்தைவிட்டு வெளியே கொண்டு வரப்பட்டபின் கிடைத்த தகவலொன்றையடுத்து அவை பரிசோதிக்கப்பட்டபோது 450 கிலோ எடையுடைய தங்கக் கட்டிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது இதன் பெறுமதி 24 கோடியே 70 இலட்சம் ரூபாவாகும்.

இது தொடர்பாக விமான நிலையசுங்கப்பகுதியினர்மீதும் நிறுவன முகாமையாளரிடமும் விசாரணைகள் நடாத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## வேவுவிமானம்

பட்ட சிறிலங்கா வை-12 விமானம் ஒன்று மாதகல், திருவடிநிழல், சேந்தான்குளம் கடற்கரைப்பகுதிகளையும் பண்டத்தரிப்பு, அளவெட்டி, இளவாலைப்பகுதிமக்கள்குடியிருப்புக்களையும் நோட்டமிட்டது. (ச)

## வாகரை

போதும் அக்கிராமங்களில் மக்கள் வாழ்ந்தனர். தற்போதைய புதிய நடவடிக்கைகளினால் மக்கள் மீண்டும் இடம்பெயர வேண்டி ஏற்பட்டுள்ளது.

இத்துணிகரத் திருட்டுச் சம்பவங்கள் பட்டப்பகலில் நிகழ்ந்துள்ளன.

கொழும்புத்துறை வசந்தபுரத்தில் ஊர்காவற்றுறையில் இருந்து அகதியாக இடம்பெயர்ந்துவந்து தங்கியுள்ள திரு.எஸ் லட்சுமணன் என்பவரின் மகளான ஏழு வயதுச் சிறுமி பாஷையூர் புனித அந்தோனியார் பாடசாலைக்குச் செல்லும்போது சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர் ஒருவர் தங்கச்சி பள்ளிக்கூடம் போகிறீரா எனக் கேட்டுச் சைக்கிளில் ஏற்றிச்சென்று ஒரு சோடி தங்கக் காப்பையும் கழற்றிக்கொண்டு சிறுமியைச் சன நடமாட்டமில்லாத இடத்தில் இறக்கி விட்டுச்சென்று விட்டாராம். அழுதபடி நின்ற சிறுமி பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (24)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி பஸ்தியாம்பிள்ளை விக்ரோறியா மனோன்மணி



மலர்வு:
18 - 07 - 1930

உதிர்வு:
19 - 05 - 1991

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 19 - 05 - 1992 செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்குப் புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் வாடும்

இல6/5, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்கள்.

(2582)